*அகில இந்திய வானொலி, சென்னை-4*
*28 09 2025 SUNDAY 12 40 PM*
*வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

1. *நவராத்திரி, தீபாவளி பண்டிகைகளுக்கு உள்ளூர் தயாரிப்புகளை வாங்க மக்கள் உறுதியேற்குமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி வேண்டுகோள் விடுத்துள்ளார்.*

2. *இயற்கை பொருட்களைக் கொண்டு யோகா தரைவிரிப்புகளை தயாரிக்கும் தமிழகத்தைச் சேர்ந்த நிறுவனத்திற்கு மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் பாராட்டு தெரிவித்துள்ளார்.*

3. *ஐ.நா. சபையில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து, வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், ஐ.நா பொதுச்செயலாளர் திரு. ஆன்டனியோ குட்டரசுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.*

4. *தமிழகத்தின் கரூரில் நேரிட்ட கூட்ட நெரிசலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.*

5. *ஆசிய நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டிகள் அஹமதாபாதில் இன்று தொடங்கியது.*

*>>>>>><<<<<<*

*நவராத்திரி, தீபாவளி உள்ளிட்ட பண்டிகைகளுக்கு மக்கள் உள்ளூர் தயாரிப்புகளை மட்டுமே வாங்குவது என்று உறுதியேற்குமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி வேண்டுகோள் விடுத்துள்ளார்.*

*அகில இந்திய வானொலியில் மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சியில் பிரதமர் இதனை தெரிவித்தார்*

*(சவுண்ட் பைட் – பிரதமர் (1) 55 செகண்ட்ஸ்)*

*வரும் 2ஆம் தேதி காந்தி ஜெயந்தி கொண்டாடப்படுவதை சுட்டிக்காட்டிய பிரதமர், கடந்த 11 ஆண்டுகளில் காதி பொருட்கள் மீது மக்களின் ஈர்ப்பு அதிகரித்திருப்பதாக கூறினார்.*

*இதேபோன்று தமிழகத்தைச் சேர்ந்த யாழ் நேச்சுரல்ஸ் நிறுவனத்தினர் புல் மற்றும் வாழை நார்களை கொண்டு யோகா பாய் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளதையும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.*

*(சவுண்ட் பைட் – பிரதமர் (2) 44 செகண்ட்ஸ்)*

*சுதந்திரப் போராட்ட தியாகி பகத்சிங் மற்றும் பின்னணிப் பாடகி லதா மங்கேஷ்கரின் பிறந்த நாளான இன்று அவர்களுக்கு தமது மரியாதையை செலுத்துவதாகவும் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டார்.*

*(சவுண்ட் பைட் – பிரதமர் (3) 76 செகண்ட்ஸ்)*

*நாட்டின் விடுதலையோடு, கருத்தியல் அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலை பெறுவதற்காக விஜயதசமி தினத்தில் தொடங்கப்பட்ட RSS இயக்கம், 100 ஆண்டுகளை நிறைவு செய்திருப்பதையும் பிரதமர் தமது உரையில் தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் – பிரதமர் (4) 67 செகண்ட்ஸ்)*

*மகளிர் சக்தியை போற்றும் வேளையில், இந்திய கடற்படையைச் சேர்ந்த இரண்டு பெண் அதிகாரிகள் 50 ஆயிரம் கிலோமீட்டர் தூரம் மேற்கொண்ட சாகசப் பயணத்தையும் திரு. நரேந்திர மோடி எடுத்துரைத்தார்.*

*தமது உரையின் நிறைவாக, நாட்டு மக்கள் அனைவருக்கும் பிரதமர் தீபாவளி வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்.*

*பிரதமர் ஆற்றிய உரையின் முழு தமிழாக்கம், சென்னை அகில இந்திய வானொலியில் இன்றிரவு எட்டு மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படுகிறது.*

*தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.*

*>>>>>><<<<<<*

*ஐ.நா பொதுச்சபை கூட்டத்தில் பங்கேற்க நியூயார்க் சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், ஐ.நா பொதுச்செயலாளர் திரு. ஆன்டனியோ குட்டரசை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.*

*இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ஐ.நா சபையில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள், சர்வதேச புவி அரசியல் சூழல் உள்ளிட்ட அம்சங்கள் குறித்து ஆலோசனை நடத்தியதாக குறிப்பிட்டுள்ளார்.*

*இதேபோன்று, சவுதி அரேபியா, அல்ஜீரியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடனும் இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாக திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.*

>>>>>><<<<<<

*தமிழகத்தின் கரூரில் நேரிட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.*

*இதுகுறித்து பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் செய்து தரப்படும் என்று மத்திய அரசு, தமிழக அரசுக்கு உறுதியளித்திருப்பதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.*

*சென்னை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதனை தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் - எல். முருகன் 30 செகண்ட்ஸ்*

இதனிடையே, நெரிசலில் சிக்கி உயிரிழந்தோரின் உடலுக்கு அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி அஞ்சலி செலுத்தி, மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோரை சந்தித்து ஆறுதல் கூறினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், த.வெ.க. கூட்டத்தின் போது, பாதுகாப்பு குறைபாடுகள் இருந்ததாக கூறினார்.

இதேபோன்று சம்பந்தப்பட்ட கட்சித் தலைவரும் தங்களது கூட்டத்திற்கு வருவோரை கருத்தில் கொண்டு, குறைபாடுகளை சரி செய்து கொள்ள வேண்டுமென்று திரு. எடப்பாடி பழனிசாமி குறிப்பிட்டார்.

பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரனும் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோரை சந்தித்து ஆறுதல் கூறினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த சம்பவத்திற்கு மாநில அரசு பொறுப்பேற்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

உயர்நீதிமன்றமும் இதுதொடர்பாக உடனடியாக விசாரணை நடத்த வேண்டும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் கேட்டுக் கொண்டார்

இந்நிலையில், கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு த.வெ.க. சார்பில் தலா 20 லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 2 லட்சம் ரூபாயும் வழங்கப்படும் என்று அக்கட்சித் தலைவர் திரு. விஜய் அறிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

ஆசிய நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டிகள் அஹமதாபாதில் இன்று தொடங்கியது.

***இப்போட்டியின் 200 மீட்டர் ஃப்ரீ ஸ்டைல் பிரிவில் இந்தியாவின் ஸ்ரீஹரி மற்றும் Dhinidhi இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.***

***200 மீட்டர் Breast Stroke பிரிவில் Dhanush மற்றும் Thanya-வும், 100 மீட்டர் பட்டர்ஃப்ளே பிரிவில் Rohit, Bikram, Shristi, Astha Chaudhary ஆகியோர் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.***

***>>>>>><<<<<<***